261

1350

Saratha Reading Series

**Book II For Class II**

சாரதா நவின

# இரண்டாம்

# பாடம்

(இரண்டாம் வகுப்பு)

BY

T. N. SUBBIAH VASTAD,

*Late Assistant.*

Veeraraghava's Secondary School,

TANJORE.

1937.

OFFICE OF THE ... 13 JUL 1937 MADRAS

T. N. SUBBIAH & SONS,

BOOK-SELLERS & PUBLISHERS

TANJORE.

SARMA BROS

G. T. MADRAS.

2

Saratha Reading Series.

BOOK II FOR CLASS II.

# சாரதா நவீன
# இரண்டாம் பாடம்.

( இரண்டாம் வகுப்பு. )

BY

T. N. SUBBIAH VASTAD,

*Late Assistant Veeraraghava's Secondary School, Tanjore*

OFFICE OF THE REGISTRAR
13 JUL 1937

(REVISED EDITION.)

**Revised By,**

L. OLAGANATHA PILLAI

EX-LECTURER IN TAMIL, SANSKRIT COLLEGE.

TRIVADI.

---

*Rights Reserved.*] 1937 [விலை அணா 3.

PRINTED AT THE SRI SHANMUKHA PRESS,
SOUTH MAIN STREET, TANJORE.

# பொருளடக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1937
MADRAS

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அரசர் | 5 |
| 2. | ரோஜா | 6 |
| 3. | முயல் | 7 |
| 4 | நாய் | 8 |
| 5. | செடி. | 9 |
| 6. | வடிவம். | 10 |
| 7. | தொழிலாளிகள். | 11 |
| 8. | தாய். | 12 |
| 9. | கிராமம். | 13 |
| 10. | சூரியன். | 14 |
| 11. | ஆலயம். | 15 |
| 12. | மசூதி. | 16 |
| 13. | புத்தர். | 17 |
| 14. | இயேசு. | 18 |
| 15. | இலக்ஷ்மி. | 19 |
| 16. | கண்ணன். | 23 |
| 17. | தென்னை. | 25 |
| 18. | சிபி. | 26 |
| 19. | பழக்கடை. | 29 |
| 20. | சிறுவர் தினசரிக் கடமை. | 31 |
| 21. | ரயில் பிரயாணம். | 33 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | தண்ணீர். | .... | .... | 36 |
| 23. | குசேலர். | .... | .... | 38 |
| 24. | தபால். | .... | .... | 41 |
| 25. | காற்று. | .... | .... | 44 |
| 26. | குரங்கும் தூக்கணாங் குருவியும். | .... | .... | 45 |
| 27. | நந்தனார். | .... | .... | 47 |
| 28. | ஆமையும் அன்னங்களும். | .... | .... | 50 |
| 29. | வண்ணாத்திப் பூச்சியின் கதை | .... | .... | 52 |
| 30. | பற்கள். | .... | .... | 54 |
| 31. | இராமன். | .... | ... | 56 |


செய்யுட் பாடம்.


| | | | | |
|---|---|---|---|---|
| 32 | உலக நீதி | .... | .... | 60 |

நவீன

# இரண்டாம் பாடம்.

OFFICE OF THE SEC
13 JUL 193
MADRAS

இந்தப் படத்தைப் பார்.
இது நமது அரசரின் படம்.
அரசரின் பெயர் ஆறாம் ஜார்ஜ்.

இவர் மிக நல்லவர்.
இவர் நம்மை நேசிக்கிறார்.
அரசன் வாழத் தேசம் வாழும்.
தேசம் வாழ நாம் வாழ்வோம்.



# 2. ரோஜா.

ரோஜா ஒருவகை புஷ்பம்.
இது சிறந்த புஷ்பம்.
இது வெகு அழகாய் இருக்கும்.
இதன் நிறம் சிவப்பானது.
இதில் இதழ்கள் பல இருக்கும்.
இதற்கு வாசனை அதிகம் உண்டு.
இதன் செடியில் முள் உண்டு.
ரோஜா மாலை விலை அதிகம்.
ரோஜா அத்தர் நல்ல வாசனை
[யுள்ளது.



# 3. முயல்.

முயல் ஒரு மிருகம்.
இது அழகிய ஜந்து.
இது வெகு சாதுவானது.
இதன் காது நீண்டிருக்கும்.
இதன் வால் குட்டையானது.
இது தாவித் தாவி ஓடும்.
இது புதரில் வசிக்கும்.
புல் இதன் தீனியாகும்.
இதை நாம் வளர்க்கலாம்.



# 4. நாய்.

இது ஒரு நாய்.
இதற்குக் கால்கள் நான்கு உண்டு.
இதன் பற்கள் கூர்மையானது.
இது மாமிச பட்சணி.
நாய் மோப்பம் பிடிக்கும்.
இதற்கு அறிவு அதிகம்.
இது வீட்டைக் காவல் காக்கும்.
இது வேட்டைக்கு உதவியாகும்.
நாய்க்கு நன்றி அதிகம் உண்டு.



# 5. செடி.

செடியின் அடியில் இருப்பது
[வேர்.

வேர் செடியைத் தாங்கும்.
இதன் உடலைத் தண்டு என்பர்.
தண்டில் இலைகள் பல உண்டு.
செடிகள் பூத்துக் காய்க்கும்.
காய் முற்றிப் பழம் பழுக்கும்.
பழத்தில் விதை உண்டு.



# 6. வடிவம்.

பந்து உருண்டை வடிவம்.
உருண்டையான பொருள்கள் [எவை?

தோசை வட்ட வடிவம்.
வட்டமான பொருள்கள் யாவை?
கத்தரிக்காய் முட்டை வடிவம்.
இந்தக் காகிதத்தைப் பார்.
இதன் வடிவம் சதுரம்.
அறையின் வடிவம் நீண்ட [சதுரம்.
உன் புத்தகம் என்ன வடிவம்?

# 7. தொழிலாளிகள்.

தட்டான் நகை செய்பவன். தச்சன் மரசாமான் செய்பவன். கொல்லன் இரும்புவேலை செய்பவன். கொத்தன் வீடு கட்டுகிறவன். வண்ணான் துணிகளை வெளுப்பவன். கன்னான் பாத்திரம் செய்பவன். கல் தச்சன் கருங்கல் வேலை செய்பவன். ஸ்தபதி தெய்வ வடிவங்கள் அமைப்பவன். ஸாரதி வண்டி ஓட்டுகிறவன். கோனான் ஆடுமேய்ப்பவன்.



# 8. தாய்.

தாயும் தந்தையும் உன்னைப் பெற்றோர் ஆவார்கள். உனக்கு மூத்தவன் அண்ணன் ஆவான். உனக்கு இளையவன் தம்பி. தங்கை உனக்கு இளையவள். அக்காள் உனக்கு முன்பிறந்தவள். தாயுடன் பிறந்தவன் மாமன். மாமன் மனைவி மாமியாவாள். தந்தையுடன் பிறந்தவள் அத்தை.



# 9. கிராமம்.

கிராமம் ஒரு சிறிய ஊர். அதன் அதிகாரி கிராம முனிசீப். அங்கு வயல்கள் அதிகம். உழவர்கள் வயல்களை உழுவார்கள். பல கிராமங்கள் அடங்கியது ஒருதாலூக்கா. அதன் அதிகாரி தாசில்தார். பல தாலூக்காக்களைக் கொண்டது ஒரு ஜில்லா. ஜில்லா அதிகாரி கலெக்டர்.




# 10. சூரியன்.

சூரியன் ஒளியைத் தருகிறது. அது வெப்பமும் கொடுக்கும். அது பகலில் ஒளியை வீசும். சூரியன் உதிக்கும் திக்கு கிழக்கு. அது மறையும் திக்கு மேற்கு. இரவும் பகலும் கொண்டது ஒரு நாள். ஏழு நாள் கொண்டது ஒரு வாரமாகும். நான்கு வாரம் ஒரு மாதம் ஆகும். பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருஷம்.



## II. ஆலயம்.

ஆலயம் என்பது கோயில். நாம் கோயிலில் கடவுளை வணங்குகிறோம். கடவுள் எல்லாம் வல்லவர். கடவுள் எங்கும் நிறைந்தவர். கடவுள் எல்லாம் அறிந்தவர். அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்."



# 12. மசூதி.

இந்தப் படத்தைப் பார். இது ஒரு மசூதி. முகம்மதியர் கடவுளைத் தொழும் இடத்திற்கு மசூதி என்று பெயர். அவர்கள் மசூதிகளில் ஆண்டவனைத் தொழுவார்கள்.

முகம்மதியரின் தலைவர் மகமத் நபி. அவர் ஒரு மஹான். அவர் மெக்கா என்ற ஊரில் பிறந்தவர். அவர் அரிய உபதேசங்கள் செய்திருக்கிறார். முகம்மதியரின் வேதத்திற்கு கொரான் என்று பெயர்.

# 13. புத்தர்.

இந்தப் படத்தைப் பார். இது ஒரு மகானின் படம். இவர் பெயர் புத்தர். புத்தரின் தந்தை ஒரு அரசர். அவருடைய பெயர் சுத்தோதனர். புத்தரின் தாய் மாயாதேவி.

புத்தர் வெகு நல்லவர். யாரிடத்தும் தயை உள்ளவர். பிறர் வருந்தினால் தானும் வருந்து

வார். அவர் சிறு வயதிலேயே உலகத்தை வெறுத்து சந்நியாசி வேடம் பூண்டார். காட்டிற்குத் தனியே சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பட்டினியா யிருந்து தவம் செய்தார். அவர் பல உபதேசங்கள் செய்திருக்கிறுர். அவை நல்ல புத்தி மதிகள் ஆகும்.

---

அவையாவன:—

1. நல்ல எண்ணம் கொள்.
2. நன்மையே செய்.
3. தீமையை அகற்று.
4. உண்மையே பேசு.
5. ஜீவஹிம்ஸை செய்யாதே.
6. யாரிடத்தும் பக்ஷமாய் இரு.
7. பெரியோரைப் போற்று.
8. ஆசையை அடக்கு.
9. பெருமையை விலக்கு.
10. பெற்றோரை வணங்கு.
11. தன்னைப்போல்பிறரை நினை.
12. எளிய வாழ்வை மேற்கொள்.
13. பற்று விலக்கு.

## 14. இயேசு.

இந்தப் படத்தைப்பார். இதில் ஒரு மாது உட்கார்ந்து இருக்கிருள். அவள் கையில் ஒரு குழந்தை இருக்கிறது. அம்மாதின் பெயர் மேரி குழந்தையின் பெயர் இயேசு. மேரி இயேசுவின். தாயாகும்.

இயேசு ஒரு புண்ணிய புருஷர். அவர் ஒரு மகான். அவர் பல உபதேசங்கள் செய்திருக்

கிருர். அவருக்கு அனேக சீஷர்கள் உண்டு. அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்பார்கள்.

கிறிஸ்தவர்கள் கோயிலுக்கு மாதா கோயில் என்று பெயர். அவர்களுடைய வேத புத்தகம் பைபிள் என்னும் பெயருடையது. இயேசு பல நன்மதிகள் கூறியிருக்கிருர்.

அவையாவன:—

கடவுள் ஒருவரே யாவர்.
காலையும் மாலையும் கடவுளை வணங்கு.
பெற்ருேரைக் கனம் பண்ணு.
பொய் சொல்லாதிரு.
சத்தியம் செய்யாதே.
பிறர் பொருளில் ஆசை கொள்ளாதே.
பிறரைத் தூஷணை பேசாதே.
மூத்தோர் சொல் தட்டாதே.
தீமை செய்தால் தீமை விளையும்.
ஏழைகளிடத்தில் மனம் இரங்கு.

நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள். ஆகவே நாம் யாவரும் சகோதரர் ஆவோம்.

## 15. சிறந்தனவும், பெரியனவும்.

அழகில் சிறந்தவள் இலக்ஷ்மி.
கருணையில் சிறந்தவன் சிபி.
கொடையில் சிறந்தவன் கர்ணன்.
கற்பில் சிறந்தவள் அருந்ததி.
கவியில் சிறந்தவன் காளிதாஸன்.
கல்வியில் பெரியவன் கம்பன்.

பலம் மிகுந்தவன் பீமன்
பொறுமை மிகுந்தவன் தருமன்.
செல்வம் மிகுந்தவன் குபேரன்.
தூக்கம் மிகுந்தவன் கும்பகர்ணன்.
புஷ்பத்தில் சிறந்தது ஜாதிப்பூ.
நதியில் சிறந்தது கங்கை.
நூலில் சிறந்தது திருக்குறள்.
பக்ஷியில் சிறந்தது அன்னம்.
பானத்தில் சிறந்தது தண்ணீர்.
தானத்தில் சிறந்தது அன்னதானம்.
காலத்தில் சிறந்தது வஸந்தகாலம்.
ஒழுக்கத்தில் சிறந்தது உண்மை பேசல்.
தொழிலில் சிறந்தது உழுதொழில்
மரத்தில் சிறந்தது அரசமரம்?
மலையில் சிறந்தது ஹிமாசலம்.
கண்டங்களில் பெரிது ஆசியா.
மிருகங்களில் பெரிது யானை.
மச்சங்களில் பெரிது சுரு மீன்.
மிருகங்களில் கம்பீரமானது சிங்கம்.

## 16. கண்ணன்.

கிருஷ்ணனின் வேறு பெயர் கண்ணன். இவன் ஒரு அவதார புருஷன். இவன் தகப்பன் பெயர் வசுதேவன். தாயின் பெயர் தேவகி.

கண்ணனுக்கு கம்ஸன் என்று ஒரு மாமன் இருந்தான். அவன் வெகு கொடியவன். தன் தங்கை தேவகியின் குழந்தைகளைப் பிறந்தவுடன்

கொன்று வந்தான். கண்ணன் கம்ஸனுக்குத் தெரியாமல் வளர்க்கப் பட்டான். யசோதை என்ற இடைச்சி கண்ணனை வளர்த்து வந்தாள்.

கண்ணன் சிறுவயதில் வெகு துஷ்டத்தனம் செய்துவந்தான். உறியிலுள்ள சட்டிகளை உடைப்பான்; தயிரை அளைவான் வெண்ணெயை வாரித் தின்பான் இவனை இந்துக்கள் தெய்வமாக வணங்குகிறார்கள். இவனுக்கு ஆலயங்கள் கட்டியிருக்கிறார்கள். கோயில்களில் இவன் பிறந்த நாளில் உறியடித் திருநாள் நடக்கிறது. இவன் பிறந்த நாளுக்கு ஸ்ரீ ஜயந்தி என்று பெயர். இவனுக்கு அனேக நாமங்கள் உண்டு.

அவையாவன:—

| | | |
|---|---|---|
| கண்ணன், | கோவிந்தன், | முகுந்தன், |
| கிருஷ்ணன், | அச்சுதன், | வாசுதேவன், |
| பரந்தாமன், | கோபாலன், | மாதவன். |




# 17. தென்னை.

தென்னை மிக உபயோகமுள்ள மரம். இது மரங்களில் உயரமானது. இது மணல் பாங்கான நிலத்தில் நன்றாய்ப் பயிராகும்.

தென்னைக்குக் கிளைகள் கிடையா. தென்னையின் காய்க்குத் தேங்காய் என்று பெயர். அதன் இலைக்கு மட்டை என்று பெயர். தேங்காய் மிக இனிப்பாயிருக்கும். இளந்தேங்காயை இளநீர் என்பர். தேங்காய் முற்றினால் கொப்பரை ஆகும். தேங்காயிலிருந்து எண்ணெய் எடுக்கலாம். அந்த

எண்ணெய்க்குத் தேங்காயெண்ணெய் என்று பெயர். தேங்காய் மட்டையில் நார் எடுத்துக் கயிறு திரிக்கலாம். மட்டைகளைக் கிழித்து கீற்று கள் முடைவார்கள். கீற்றுகள் கூரைவேய உதவும். அடி மரத்தினால் தொட்டி செய்யலாம். தென்னை மரத்தில் உபயோகமில்லாத பாகம் உண்டோ! இல்லவே இல்லை.

தென்னையின் சிறு கன்றுக்குத் தென்னம் பிள்ளை என்று பெயர். தென்னை குலை குலை யாய்க் காய்க்கும். ஒரு குலைக்குச் சுமார் ஐம்பது காய்கள் இருக்கும்.

---

# 18. சிபி.

வெகு நாளைக்கு முன் ஒரு அரசன் இருந் தான். அவன் பெயர் சிபி. அவன் கீழ் அனேக சிற்றரசர்கள் இருந்தார்கள். ஆகையால் அவ னுக்கு ராஜாதி ராஜன் அல்லது சக்கரவர்த்தி என்று பெயர் வழங்கிற்று.

சிபி மிக நல்ல குணமுடையவன். பிராணி களிடத்தில் அன்பும் இரக்கமும் உள்ளவன். அவன் பிறர் வருந்துவதைப் பார்க்கச் சகிக்க மாட்டான்.

ஒரு நாள் ஒரு வேடன் ஒரு புறுவை அம் பால் எய்தான். அது அடிபட்டுப் பறந்து வந்து

அரசன் மடியில் விழுந்தது. அரசன் அதை ஆதரித்தான். அது காயத்தால் வருந்துவதை கண்டு மனமிரங்கி அதற்குச் சிகிச்சை செய்தான்.



சற்று நேரத்திற்கெல்லாம் வேடன் அரசனிடம் ஓடிவந்தான். அவன் அந்தப் புருவைத் தரும்படி அரசனை வேண்டினான். அரசன் அதைக் கொடுக்க மறுத்தான். வேடன் தான் எய்த புரு தன்னுடையது என்றான். வேடன் உண்மையில் வேடன் அன்று. அரசன் மனதைச் சோதிக்க எண்ணி வேட வடிவம் பூண்டு வந்த ஈசன். வேடன் தான் பசியால் வருந்துவதாகப் பாசாங்கு பண்ணினான். அரசன் வேண்டிய ஆகாரம் தருவதாய்ச் சொன்னான். வேடன்

தனக்கு மாமிசந்தான் வேண்டின ஆகாரம் என்றான். அரசனுக்கும் வேடனுக்கும் வெகு நேரம் வாக்கு வாதம் நடந்தது.

கடைசியாக அரசன் புருவின் நிறைக்குச் சரியளவு மாமிசம் தனது உடலிலிருந்து தருவதாய்ச் சொன்னான். வேடன் சம்மதித்தான். அரசன் தராசை எடுத்துவரக் கட்டளை யிட்டான். ஒரு தட்டில் புருவை வைத்தான். மறு தட்டில் தன் தொடையைக் கீறி மாமிசம் அறுத்து வைத்தான். புருவின் நிறை அதிகமாயிருந்தது. தன் உடலையே வேடனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி தராசுத் தட்டில் ஏறினான். புருவின் நிறை சரியாயிற்று.

ஆ! என்ன அதிசயம்! சிபி, தன்னுயிரைக் கொடுத்து, புருவின் உயிரைக் காப்பாற்ற எண்ணினான். சிபியின் கருணையே கருணை

" தன்னுயிரைப்போல் பிற உயிரை நினை."

---



# 19. பழக் கடை.

இந்தப் பழக்கடையில் அனேகவித பழங்கள் இருக்கின்றன. அவையாவன:—வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், நார்த்தம்பழம், கொய்யாப்பழம், கிச்சிலிப்பழம், சீமை இலந்தைப்பழம், கொடிமுந்திரிப்பழம், அன்னாசிப்பழம், சீத்தாப்பழம் முதலியன. கடைக்காரன் பழங்களைத் தட்டுகளில் வரிசையாயும் அழகாயும் அடுக்கி யிருக்கிறான். பழங்கள் இனிப்பாய் இருக்கும். புசித்தால் உடம்பிற்குச் சுகம் தரும். நன்றாய்ப் பழுத்த பழங்களையே சாப்பிடவேண்டும் அழுகின பழங்களை புசித்தல் கூடாது.

பழங்களின் நிறத்தைப் பார். அநேகமாய் எல்லாப் பழங்களும் மஞ்சள் நிறமாய் இருக்கின்றன. சில சிவப்பாய் இருக்கின்றன. வேறு சில பச்சை நிறமாய் இருக்கின்றன. மஞ்சள் நிறமுள்ள பழங்கள் எவை? பச்சை நிறமுள்ள பழங்கள் எவை? வாழைப் பழங்களைக் கவனித்துப் பார். சில தட்டுகளில் உள்ள வாழைப்பழங்கள் மஞ்சள் நிறமாயும், சில சிவப்பு நிறமாயும், சில பச்சை நிறமாயும் இருக்கின்றன. ஆகையால் வாழைப்பழங்களில் மூன்று வகை நிறமுள்ள ஜாதிகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

வாழைப் பழம் எல்லாக் காலங்களிலும் கிடைக்கும். மா, பலா முதலியன அப்படி கிடைக்காது. மாம்பழம் எக்காலங்களில் கிடைக்கும்? எக்காலங்களில் கிடைக்காது? இது என்ன மாதம்? இம் மாதம் கடையில் என்னென்ன பழங்கள் கிடைக்கும்?

பழங்களில் சில மரங்களிலும், வேறு சில கொடிகளிலும் உண்டாகின்றன. அவற்றுள் மா, கொய்யா முதலியன மரங்களிலும், கொடிமுந்திரி, திராக்ஷை முதலியன கொடிகளிலும் காய்த்தவை யாகும்.

# 20. சிறு பிள்ளைகளின் கடமை.

---

காலையிலே எழுந்திருக்க வேண்டும்.
கை கால்களை நன்றாய்க் கழுவ வேண்டும்.
பற்களை நன்றாகத் துலக்க வேண்டும்.
முகத்தைச் சுத்தமாய்க் கழுவ வேண்டும்.
சுத்தமான இடத்திலே உட்கார வேண்டும்.
கடவுளை மனமார வணங்கவேண்டும்.
பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்க வேண்டும்.
பெற்றோர்க்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும்.
அழுக்கு போகக் குளிக்க வேண்டும்.
ஆடைகளை நன்றாய்த் துவைக்க வேண்டும்.
அமைதியுடனே ஆகாரம் புசிக்கவேண்டும்.
எதையும் நன்றாக மென்று தின்ன வேண்டும்.
நேரத்தில் பள்ளிக்கூடம் போகவேண்டும்.
குருவைக் கண்டவுடன் வணங்கவேண்டும்.
ஆரவாரமன்றி வகுப்பிலே அமர வேண்டும்.
பாடங்களைக் கவனமாய்க் கேட்கவேண்டும்.
குருவின் கட்டளைக்கு அடங்கி நடக்கவேண்டும்.
பிள்ளைகளுடன் பகையின்றி பழகவேண்டும்.

சண்டைகள் செய்யாதிருக்க வேண்டும்.

மாலையிலே ஓடி விளையாடவேண்டும்.

மகிழ்வுடனே வீட்டுக்குத் திரும்ப வேண்டும்.

உற்சாகமுடன் பாடங்களைப் படிக்கவேண்டும்.

அன்னையிட்ட ஆகாரத்தை அருந்தவேண்டும்.

கடவுளை வணக்கம் செய்த பின் படுக்கப் போக வேண்டும்.

காற்றுலவு மிடத்திலே படுக்க வேண்டும்.



# 21. ரயில் பிரயாணம்.

கோபாலன் :— இராமா ! நீ எப்போதாவது ரயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறுயா ?

இராமன் :—நான் ஒரு தடவை ரயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறேன்.

கோபாலன் :—நீ எந்த ஊருக்குப் போனுய்?

இராமன் :—நான் சென்னைக்குப் போனேன்.

கோபாலன் :— யாருடன் போனுய் ?

இராமன்:—என் தகப்பனுருடன் போனேன்.

கோபாலன்:— நான் ரயில் வண்டியில் பிரயாணம் செய்ததில்லை. அதைப்பற்றி எனக்குச் சொல்.

இராமன்:—என் தகப்பனர் என்னை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனர் அங்கு ஒரு அறையின் சுவரில் டிக்கெட் ஆபீஸ் என்று எழுதியிருந்தது. அந்த ஆபீசில் அவர் பணம் செலுத்தி ஒன்றரை டிக்கெட் வாங்கினர்.

கோபாலன் :— டிக்கெட் என்றால் என்ன ?

இராமன் :— அது அச்சிட்ட ஒரு சிறு அட்டைத் துண்டு.

கோபாலன்:—அதில் என்ன எழுதியிருக்கும்.

இராமன் :— அதில் நாம் புறப்படும் ஊரின் பெயர், நாம் போகும் ஊரின் பெயர், சார்ஜு ஆகிய இவைகள் அச்சிடப்பட்டிருக்கும்.

கோபாலன்:—ஒன்றரை டிக்கெட் என்றாயே அதன் விபரம் என்ன ?

இராமன் :— நம்மைப் போன்ற சிறுவர்களுக்கு அரைச் சார்ஜும், பெரியவர்களுக்கு முழுச் சார்ஜும் வாங்கவேண்டும். ஆகையால் என் தகப்பனர் தனக்கு முழுச் சார்ஜும், எனக்கு அரைச் சார்ஜும் ஆக ஒன்றரைச் சார்ஜுக்கு ஒன்றரை டிக்கெட் வாங்கினர்.

கோபாலன் :— பிறகு என்ன செய்தீர்கள் ?

இராமன் :— நாங்கள் வண்டி நிற்கும் இடத்திற்குப் போனேம். வழியில் ஒருவர் எங்கள் டிக்கெட்டைப் பரிசோதித்தார். பிறகு வண்டியில் ஏறி உட்கார்ந்தோம்.

கோபாலன் :— எதற்காக ஒருவர் உங்கள் டிக்கெட்டுகளைப் பரிசோதனை செய்தார் ?

இராமன் :— டிக்கெட் வாங்காமல் ஒருவரும் பிரயாணம் செய்யக்கூடாது. நாங்கள் டிக்கெட் வாங்கியிருக்கிறேமா என்று சோதித்தார்.

கோபாலன் :— பிறகு என்ன நடந்தது ?

இராமன் :— எங்களைப்போல் பலர் வண்டிகளில் ஏறினர்கள். கதவுகள் மூடித் தாளிடப்பட்டன. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒருவன் மணி அடித்தான். வண்டி புறப்பட்டது.

கோபாலன் :— வழியில் என்ன கண்டாய் ?

இராமன் :— மரங்கள் எல்லாம் நகர்வது போல் தெரிந்தன. வழியில் அநேக ஊர்கள் இருந்தன.

கோபாலன் :— வண்டி நேரே சென்னைக்குப் போய் நின்றதா ?

இராமன் :— இல்லை; அடிக்கடி வழியிலுள்ள ஸ்டேஷன்களில் நின்றது. அங்கு சில ஜனங்கள்

இறங்கினார்கள், சிலர் ஏறினார்கள். சில மூட்டைகள் இறக்கப்பட்டன, சில மூட்டைகள் ஏற்றப்பட்டன. கடைசியாக நாங்கள் சென்னையில் வண்டி நின்றவுடன் இறங்கினோம்.

---

## 22. தண்ணீர்.

நாம் வாழ்வதற்கு அவசியமானவை காற்று, உணவு, தண்ணீர் என்பன. நாம் நோயற்று இருக்க நல்ல காற்று, நல்ல உணவு, நல்ல தண்ணீர் வேண்டும்.

நமக்கு ஆறு, குளம், கிணறு, முதலிய இடங்களில் நீர் கிடைக்கிறது. குளத்திற்கு ஜலம் ஆற்றிலிருந்து வருகிறது. ஆற்றிற்கு ஜலம் மழை பெய்வதால் கிடைக்கும். கிணற்றிற்கு ஜலம் பூமியிலிருந்து ஊறுகிறது. ஆற்றிற்கு ஜலம் எங்கிருந்து வருகிறது தெரியுமா? மலை முதலிய மேட்டுப்பாங்கான இடங்களிலிருந்து வருகிறது. மலையில் ஜலம் ஏது? அங்கு ஏராளமாய் மழை பெய்யும். அந்த ஜலம் வழிந்து ஓடி ஆறுகளாகப் பெருகும்.

தண்ணீர், அழுக்கு நீங்கக் குளிப்பதற்கும், குடிப்பதற்கும், உண்ணும் பதார்த்தங்களைச் சமைப்பதற்கும் உபயோகப்படும். செடி, கொடி, புல், பூண்டு, முதலிய தாவரங்கள்கூடத் தண்ணீர் இல்லாவிடில் முளைக்காது. நமக்கு

வேண்டிய நெல்முதலிய உணவுப் பொருள்கள் உண்டாகாது. பஞ்சம் உண்டாகும்.

சுத்த ஜலத்திற்கு நிறம் இல்லை. அது பளிங்குபோலிருக்கும். அதற்கு உருசியும் இல்லை. மணமும் கிடையாது. மழை ஜலம் சுத்தமானது. குளத்து நீர் சுத்தமானது அன்று. குளத்து நீரைக் காய்ச்சி உபயோகிக்க வேண்டும். காய்ச்சினுல் அதிலுள்ள சிறு பூச்சிகள் இறந்து போகும்.

அந்தப் பூச்சிகள் நமது கண்ணுக்குத் தெரியா. குளத்து ஜலத்தைக் காய்ச்சி உபயோகிக்காவிடில் அதிலுள்ள பூச்சிகள் நமது இரத்தத்தில் சேர்ந்து பலவித வியாதிகளைப் பரவச் செய்யும்.

# 23. குசேலர்.

குசேலர் ஒரு பெரியார். இவர் ஜாதியில் பிராமணர். இவர் மனைவியின் பெயர் சுசீலை. இவள் நல்ல குணசாலி. அழகில் இலக்ஷ்மியை ஒத்தவள். இவள் தன் நாயகனை கடவுள் என்று அவரைப் போற்றி வந்தாள்.

குசேலர் மிக ஏழை. இவருக்கு இருபத்தேழு குழந்தைகள் பிறந்தன. இவர் காட்டில் தன் மனைவி மக்களுடன் வசித்து வந்தார். அங்கு தவம் செய்தார். தினம் காட்டில் கிடைக்கும் புல்

அரிசியைப் பொறுக்கி, அதைச் சுசீலையிடம் கொடுப்பார். சுசீலை அதை அன்புடன் வாங்கி கஞ்சி காய்ச்சுவாள். முதலில் தன் கணவன், குழந்தைகள் முதலியோருக்கு இடுவாள். பிறகு தான் புசிப்பாள். எல்லோருக்கும் ஒரு வேளைக் கஞ்சிதான் கிடைக்கும்.

குழந்தைகள் பசியால் வருந்தின. குசேலர் எல்லாம் ஈசன் செயல் என்று இருந்தார். சுசீலை தன் குழந்தைகளின் கஷ்டத்தைத் தீர்க்க, பல வாறு யோசனை செய்தாள். கண்ணன், தன் கணவனோடு படித்தவர் என்ற ஞாபகம் அவளுக்கு வந்தது. உடனே அவள் கணவனிடம் போய்த் தலை குனிந்து நின்றாள். குசேலர் அவளை 'என்ன வேண்டும்'? என்று கேட்டார்.

அதற்கு சுசீலை, "ஐயா, கண்ணன் என்ற ஒருவர் சிறுவயதில் உம்முடன் படித்தாரல்லவோ! அவர் இப்பொழுது துவாரகைக்கு அரசனாய் இருக்கிறார். நீங்கள் தயவுசெய்து அவரிடம் போய் கொஞ்சம் பொருள் வாங்கி வர வேண்டும். இல்லாவிடில் நமது குழந்தைகள் பசியால் மெலிந்து இறக்கும் " என்றாள். அதற்கு குசேலர், "பெண்ணே! ஏற்பது இகழ்ச்சி, தோழனோடும் ஏழமை பேசலாகாது. ஆதலால் நான் கண்ணனிடம் போய் யாசகம் செய்யமாட்டேன்" என்று

மறுத்தார். சுசீலை விடாமல் வெகு நேரம் மன்றாடி வேண்டினள். குசேலர் தனது மனைவியின் இஷ்டப்படி கண்ணனிடம் போகச் முடிவில் சம்மதித்தார்.

கண்ணன் வசித்த இடம் துவாரகை. அதற்கும் குசேலருடைய ஊருக்கும் வெகு தூரம். குசேலர் கால் நடையாய் துவாரகைக்குச் சென்றார். கண்ணனைக் கண்டார். கண்ணன் குசேலரைக் கண்டவுடன் அவரைக் கட்டித் தழுவினார். பலவாறு புகழ்ந்தார். ஏராளமான பொருளைக் கொடுத்தார். குசேலரும் அவரது மனைவி மக்களும் சுகமாய் வாழ்ந்தனர்.

# 24. தபால்.

இராமன்:— கிருஷ்ணு, எங்கு வேகமாய்ப் போகிறுய் ?

கிருஷ்ணன்:— நான் தபாலாபீஸுக்குப் போகிறேன்.

இராமன்:— ஏன் ?

கிருஷ்ணன்:— நான் ஒரு கார்டு வாங்கப் போகிறேன்.

இராமன்:— நானும் கூட வருகிறேன்.

கிருஷ்ணன்:— வா, சீக்கிரம் போவோம்.

இராமன்:— கார்டு நான் பார்த்ததில்லே.

கிருஷ்ணன்:— என்னுடன் வா, உனக்கு ஒரு கார்டு வாங்கி அதைக் காட்டுகிறேன்.

இராமன்:— அதன் விலை என்ன ?

கிருஷ்ணன்:— ஒரு கார்டின் கிரயம் அரை அணு.

இராமன்:— இந்தப் பக்கத்தில் ஒரு தலையின் உருவம் இருக்கிறதே, அது யாருடையது ?

கிருஷ்ணன்:— அது நமது அரசருடைய உருவம்.

இராமன்:— இந்தக் கார்டை என்ன செய்யப் போகிருய் ?

கிருஷ்ணன்;— இந்தக் கார்டில் என் மாமனுக்கு எழுதப் போகிறேன்.

இராமன்:— நானும் என் மாமனுக்கு எழுத வேண்டும். இதில் எப்படி எழுதுகிறது ?

கிருஷ்ணன்:— இராமா, கவனித்துக் கேள். தலையின் உருவம் உள்ள பக்கத்தில் விலாசம் எழுது. மற்ற பக்கத்தில் சமாசாரம் எழுது.

இராமன்:— விலாசம் எப்படி எழுதுகிறது !

கிருஷ்ணன்:— நான் சொல்லித் தருகிறேன். உன் மாமன் பெயர் என்ன ?

இராமன்:— என் மாமன் பெயர் முருகப் பிள்ளை.

கிருஷ்ணன்:— அதை முதல் வரியில் எழுது. அவர் எந்த ஊரில் எந்தத் தெருவில் வசிக்கிறார்.

இராமன்:— புதுத்தெருவில் வசிக்கிறார் ?

கிருஷ்ணன்:— அத் தெருவின் பெயரை இரண்டாம் வரியில் எழுது. அவர் எந்த ஊரில் இருக்கிறார் ?

இராமன்:— அவர் மதுரையில் இருக்கிறார்.

கிருஷ்ணன்:— ஊரின் பெயரைக் கடைசி வரியில் எழுது.

இராமன்:— பிறகு என்ன செய்கிறது ?

கிருஷ்ணன்:— மறு பக்கத்தில் சமாசாரம் எழுது. பிறகு தபால் பெட்டியில் போடு. தபால் உத்தியோகஸ்தர்கள் அதை எடுத்து ரயில் மூலமாய் உன் மாமனுக்கு அனுப்பி விடுவார்கள்.

இராமன்:— கிருஷ்ணா, இன்று உன்னிடமிருந்து எவ்விதம் கடிதம் எழுதுவது என்பதை அறிந்து கொண்டேன், வந்தனம்.

# 25. காற்று.

காற்று நம்மைச் சுற்றிலும் இருக்கிறது. அது நமது கண்ணிற்குத் தெரியாது. நாம் காற்றை சுவாசிக்கிறோம். ஆகாரமில்லாமலும் சில நாள் ஜீவிக்கலாம். ஆனால் காற்றில்லாவிடில் ஒரு நொடி கூட நாம் ஜீவிக்க முடியாது. மூச்சு இல்லாவிடில் பிணம் ஆவோம்.

காற்று பலம் உள்ளது. அது இலை கிளைகளை அசைக்கிறது. காற்று மெதுவாய் வீசினால் அதற்கு இளங்காற்று என்று பெயர். வெகு பலமாய் வீசினால் அதற்குப் பெருங்காற்று என்று பெயர். பெருங்காற்று சில வேளைகளில் பெரிய மரங்களையும் வேருடன் பிடுங்கிக் கீழே தள்ளி விடும்.

நமது ஊரில் வீசும் காற்றிற்கு அனேக பெயர்கள் உண்டு. காற்று சில காலம் மேற்கிலிருந்து வரும். அதற்கு மேல்காற்று என்று பெயர். சில நாள் தெற்கிலிருந்து வரும். அதற்குத் தென்றல் என்று பெயர். சில காலம் கிழக்கிலிருந்து வரும். அதைக் கீழ்காற்று என்பார்கள். சில நாள் வடக்கிலிருந்து வீசும். அதற்கு வடந்தை என்று பெயர்.

காற்று மேகங்களைத் தள்ளிக்கொண்டு வரும். மேகங்கள் கூடினால் மழைக்கு ஆதாரம். மழை பெய்வதற்கு முன் குளிர்காற்று வீசும். பிறகு மழை பெய்யும்.



## 26. குரங்கும் தூக்கணங் குருவியும்.

ஒரு நாள் ஒரு காட்டில் அதிக மழை பெய்தது. அக்காட்டிலுள்ள ஒரு குரங்கு குளிரால் அவஸ்தைப்பட்டு, ஒரு பெரிய மரத்தடியில் வந்து பதுங்கிற்று.

அந்த மரத்தடியில் ஒரு தூக்கணங் குருவி கூடுகட்டி வசித்து வந்தது. அக்குருவி குரங்கைப் பார்த்து, "ஐயா! உமக்கு மனிதரைப்போல் கை கால் முதலியவை இருக்கின்றனவே. நீர் ஏன் வீடு கட்டிக் குடியிருக்கக்கூடாது? எனக்குக் கைகள் இல்லை என்றாலும் நான் கூடு கட்டிக் கொண்டு வசிக்கிறேன். மழை வந்தால் பறந்து வந்து கூட்டில் தங்குவேன். மழை நின்றவுடன், பறந்தோடி இரை தேடுவேன். நீர் ஏன் வீணாய் அவஸ்தைப் படுகிறீர்" என்று கேட்டது.

உடனே குரங்குக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. "அற்பா, நீ யார்? நீயா எனக்கு புத்தி சொல்பவன்? உன்னை யார் யோஜனை கேட்டார்கள்? ஏன் என்னைப் பரிகாசம் செய்கிறாய்? இதோ உன் கூடு என்ன கதி ஆகிறது பார்," என்று சொல்லிக்கொண்டே மரத்தின் மீது ஏறி, கிளையில் தொங்கின கூட்டைப்பிரித்து அதிலுள்ள குஞ்சுகளைக் கொன்றது. குருவி திடுக்கிட்டுப் பறந்தோடி விட்டது.

ஆகையால் துஷ்டர்களுக்கு நல்லுபதேசம் சொன்னால் அஹிதம் செய்வார்கள். அவர்களுக்கு உபதேசம் பண்ணலாகாது.

## 27. நந்தனர்.

நமது நாட்டிலே ஆதனூர் என்ற ஒரு சிறு கிராமம் உண்டு. அதில் ஒரு புலையன் இருந்தான். அவன் பெயர் நந்தன். அவன் ஒரு பிராமணனிடம் அடிமை வேலை செய்து வந்தான்.

நந்தன் மிக நல்லவன். திருட்டு முதலிய கெட்ட குணங்கள் இல்லாதவன். எஜமான் இட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்பவன். திடமான தெய்வ பக்தி உள்ளவன்.

புலையர்கள், காளி, காட்டேரி, முதலிய துஷ்ட தேவதைகளை வணங்குவது வழக்கம். நந்தன்

மாத்திரம் அப்படியல்லாமல் சிவனையே வணங்கு வான். சிவன் கோயில்களுக்கு டமாரம் பேரிகை முதலிய வாத்தியங்களுக்கு வார், தோல் முதலியன கொடுத்து வந்தான்.

ஆதனூர்க்கு அருகில் திருப்பன்கூர் என்ருெரு ஊர் உண்டு. அதில் ஒரு அழகிய சிவாலயம் உண்டு. நந்தன் ஒரு நாள், அக்கோயில் வாசலில் சுவாமி தரிசனம் செய்ய நின்றான். சிவாலயங்களிலெல்லாம் சுவாமியின் முன் நந்தி வைத்திருப்பார்களல்லவா? அந்நந்தி சுவாமியைப் பார்ப்பதற்கு மறைவாக இருந்தது. ஆகையால் சுவாமி நந்தன் கண்ணிற்குத் தெரிய வில்லை. அவன் மிக மனவருத்தங்கொண்டு, தரைமீது வீழ்ந்து, புரண்டு புரண்டு அழுதான். ஈசன் மனம் இரங்கி நந்தியை விலகும்படி செய் தார். நந்தன் சுவாமி தரிசனம் செய்தான். ஆடினான், பாடினான், ஆனந்தக் கூத்தாடினான். பிறகு சந்தோஷமாய் வீட்டிற்குத் திரும்பினான்.

ஒரு சமயம், நந்தன் சிதம்பரம் போக ஆசை கொண்டான். சிதம்பரத்தில் ஓர் அழகிய சிவாலயம் உண்டு. அதில் உள்ள சுவாமியின் பெயர் நடராஜர். அம்மனின் பெயர் சிவகாமி யம்மை. நந்தனுக்கு நடராஜரைத் தரிசனம் செய்ய இச்சை உண்டாயிற்று. எஜமானனைத் தான் சிதம்பரம் போக அனுமதி கேட்டான். எஜமானன் அவனுக்கு உத்தரவு கொடுக்க மறுத்தான். வெகு நாள் மன்றாடிக் கெஞ்சினான்.

எஜமானன் வயல் வேலைகள் முடிந்த பிறகு போகலாம் என்றான். நந்தன் ஈசனை வேண்டினான். வயல் வேலைகள் தானே சீக்கிரமாய் முடிந்தன. எஜமானனுக்கு அளவில்லாத சந்தோஷம் உண்டாயிற்று. நந்தனுக்குச் சிதம்பரம் போக உத்தரவு கொடுத்தான்.

நந்தன் சந்தோஷமாய்ச் சிதம்பரம் போனான் கோபுரத்தை வணங்கினான். புலையனாதலால் ஆலயத்தினுள் போக முடியவில்லையே என்று வருத்தப்பட்டான். ஈசன் மனமிரங்கி அவனுக்குக் கனவில் தோன்றி, " நந்தா, நீ வருத்தங் கொள்ளாதே, நெருப்பில் மூழ்கு, புலையுடல் நீங்கிச் சுத்தமாய் விடுவாய் " என்று கூறினார். நந்தன் ஆனந்தங் கொண்டான். கோயில் வாயிலில் தீக்ஷதர்கள் தீ வளர்த்தார்கள். அதில் யாவருங் காண மூழ்கினான். கண்டோர் அதிசயிக்கும்படி புண்ணிய முனிவர் போல விளங்கினான். பிறகு கோயிலிற்குள் புகுந்தான். சுவாமி தரிசனம் செய்தான். அன்று முதல் நந்தனை யாவரும் நந்தனார் என்ற மரியாதைப் பெயரிட்டுப் போற்றி வந்தார்கள்.




## 28. ஆமையும் அன்னங்களும்.

ஒரு குளத்தில் ஒரு ஆமையும் இரண்டு அன்னங்களும் வெகு நேசமாய்க்கூடி வாழ்ந்தன. வெகு நாளாய் மழை பெய்யாத படியால் குளத்தில் தண்ணீர் வற்ற ஆரம்பித்தது. அதனுல் அன்னங்கள் வேறு குளத்திற்குப் போக எண்ணி அதைத் தங்கள் நண்பனுன ஆமைக்குத் தெரிவித்தன. ஆமை, அன்னங்களே நோக்கி, " நண்பர்காள்! உங்களுக்கு இறகுகள் இருக்கின்றன. நீங்கள் பயமில்லாமல் பறந்து செல்வீர்கள். நான் என்ன செய்வேன். இங்குதான் இருந்து

நான் இறக்க வேண்டும். என்னை இங்கு தனியாய் விட்டுப் போக உங்களுக்கு மனமுண்டா;" என்றது.

அன்னங்கள், "நண்பனே! உன்னை விட்டுப் பிரிய எங்களுக்கு மனமில்லை. நாங்கள் சொல் வதைக் கேட்டு அப்படியே நடந்தால் உன்னையும் அழைத்துப் போவோம். அதாவது வழியில் நீ வாய் திறக்கக்கூடாது. மௌனமாய் இருக்க வேண்டும். நீ வாய் திறந்தால் உனக்கு அபாயம் வரும்" என்றன. ஆமை தான் வாய் திறவாமல் இருக்கச் சம்மதித்தது.

அன்னங்கள் ஒரு குச்சியைக் கொண்டு வந்தன. ஆமையை அக்குச்சியின் மத்தியைக் கௌவிக் கொள்ளச் சொல்லின. ஆமையும் அப்படியே செய்தது வழியில் வாய் திறக்காமல் இருக்கும்படி திரும்பவும் அன்னங்கள் ஆமைக்கு எச்சரிக்கை செய்தன.

பிறகு அன்னங்கள் குச்சியைப் பக்கத்துக்கு ஒன்ருய்க் கௌவித் தூக்கிக்கொண்டு பறந்தன. வழியில் சிலர் இதைப் பார்த்து சத்தம் செய்தார் கள். புத்தியற்ற ஆமை சத்தம் என்னவென்று அன்னங்களைக் கேட்பதற்கு வாயைத் திறந்தது. ஐயோ பாவம்! திடீரென்று கீழே விழுந்து அடி பட்டு இறந்தது.

நண்பர்கள் சொல்லும் ஹிதமான வார்த்தையைத் தட்டலாகாது.

---



## 29. வண்ணாத்திப் பூச்சி சொல்லிய தன் கதை.

நான் ஒரு வண்ணாத்திப் பூச்சி. என் கதையைக் கேளுங்கள். அது உங்களுக்கு விநோதமாய் இருக்கும். நான் பிறந்தபொழுது கடுகளவு முட்டையாய் இருந்தேன். என் தாய் என்னை ஒரு இலையில் வைத்திருந்தாள். அப்பொழுது எனக்குக் கண்ணும் இல்லை, பசியும் இல்லை.

சில நாள் சென்ற பிறகு நான் ஒரு புழுவானேன். எனக்குப் பசியாய் இருந்தது. என் தாயைத் தேடினேன். காணேன். அதனால் நான்

இலையைத் தின்று வளர்ந்தேன். வர வர ஒரு பெரும் புழுவானேன். பிறகு எனக்கு ஒரு மயக்கம் உண்டாயிற்று. என் உடலில் ஒரு வித பசை இருந்தது. அதைக்கொண்டு ஒரு நூல் கூடு கட்டிக் கொண்டேன். சில நாளைக்குப் பிறகு எனக்கு விழிப்பு உண்டாயிற்று. தூங்கி எழுந்தேன். என் தேகத்தைப் பார்த்தேன். எனக்கு அழகிய சிறகுகள் முளைத்திருந்தன.

நூல் கூட்டை விட்டு வெளியே வந்தேன். அங்கும் இங்கும் பறந்தேன். அன்று முதல் பூக்களில் உட்கார்ந்து தேனைக் குடித்து வளர்கிறேன். இதுவே எனது சரித்திரம்.



## 30. பற்கள்.

இந்தப் படத்தைப் பார். இது நமது பற்களின் படம். நமது வாயில் இரண்டு வரிசைப் பற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வரிசையிலும் பதினாறு பற்கள் உண்டு. வரிசை இரண்டிற்கும் முப்பத்திரண்டு பற்கள் இருக்கின்றன.

பற்களின் உருவத்தையும் அமைப்பையும் கவனித்துப்பார் முன் பற்கள் எப்படியிருக்கின்றன? கடைவாய்ப் பற்கள் எவ்விதம் இருக்கின்றன? முன்பற்கள் கூர்மையாய் இருக்கின்றன. அவைகள் ஒரு பதார்த்தத்தைக் கடிக்க உதவுகின்றன. கடைவாய்ப் பற்கள் தட்டையாய்

இருக்கின்றன. அவைகள் ஆகாரத்தை அரைக்க உதவுகின்றன

நாம் உண்ணும் ஆகாரத்தை வாயில்போட்டவுடன் முதல் வேலை பற்கள்தான் செய்கின்றன அவைகள் செய்யும் வேலைதான். முக்கியமானது. பற்கள் ஆகாரத்தை நன்ருய் அரைத்து மிருதுவாய்ச் செய்கின்றன. அப்படிச் செய்யா விட்டால் ஆகாரம் ஜீரணமாகாது. நமக்கு நோய் உண்டாகும். ஆகையால் நாம் நமது பற்களைப் பாதுகாக்கவேண்டும். தினந்தோறும் அதிகாலையில் பற்களை நன்ருய்த் தேய்த்துக் கழுவ வேண்டும். இல்லாவிடில் பூச்சிகள் உண்டாகி, பல்லில் வலி உண்டாகும். நாளடைவில் பற்கள் உதிர்ந்து விடும். கடினமான பதார்த்தங்களைக் கடிக்கக் கூடாது. அப்படி கெட்டியான பதார்த்தங்களைக் கடித்தால் பற்கள் ஆடி விழுந்து விடும். அதிக சூடான பண்டமும் அதிக குளிர்ச்சியான பண்டமும் பல்லில் படலாகாது. நாம் குறித்த வேளைகளில்தான் சாப்பிடவேண்டும். இல்லாவிடில் பற்களுக்கு அதிக வேலை உண்டாகி சீக்கிரம் கெட்டுப்போகும்.

பற்களுக்குத் தந்தம் என்று பெயர். "தந்தம் போனல் அந்தம் போம்" என்பது பெரியோர்கள் சொல்லும் பழமொழியாகும்.



# 31. இராமன்.

இந்தியா நமது தேசம். நாம் வாசம் செய்யும் ஊர் இந்தியா தேசத்தின் தென் பாகத்தில் இருக்கிறது. நமது ஊருக்கு வடக்கே வெகு தூரத்திற்கு அப்பால் அயோத்தி என்ற ஒரு அழகிய நகரம் உண்டு. அதில் வெகு நாளைக்கு முன்னே தசரதர் என்ற ஒரு அரசர் இருந்தார். அவருக்கு மூன்று மனைவிகள் இருந்தனர். முதல் மனைவியின் பெயர் கௌசலை, கைகேயி இரண்டாவதுமனைவி, சுமித்திரை என்பவள் மூன்ருவது மனைவி.

தசரதருக்கு வெகு காலம் பிள்ளையில்லை. ஆதலால் அரிய யாகங்கள் செய்தார். கடவுள் கிருபையால் குழந்தைகள் பிறந்தன. கௌசலை

இராமனைப் பெற்றாள். கைகேயி பரதனை ஈன்றாள். சுமித்திரைக்கு இலக்ஷ்மணன், சத்ருக்கனன் என்ற இரு பிள்ளைகள் பிறந்தனர் ஆகவே இராமன் இலக்ஷ்மணன், சத்ருக்கனன், என்ற நால்வரும் சகோதரர் ஆவார்.

தசரதர் தனது நான்கு பிள்ளைகளுக்கும் நான்கு அரச குமாரிகளை மணம் செய்வித்தார். பிறகு இராமனுக்குப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்தார். கைகேயி தன் மகன் அரசனாக வேண்டும் என்று எண்ணினாள். தன் கணவனிடம் சென்று " நாதா ! இராமன் பதினான்கு வருஷம் காட்டில் வசிக்கவேண்டும். பரதன் அரசாள வேண்டும் " என்று பிடிவாதமாய்க் கூறினாள். தசரதர் மன வருத்தங் கொண்டார். இச்செய்தி இராமனுக்குத் தெரிந்தது. தாய் மனங் கோணாமல் காட்டிற்குச் சென்றான். இராமன் மனைவி சீதையும், தம்பி இலக்ஷ்மணனும் கூடவே சென்றார்கள். அச்சமயம் பரதன் ஊரில் இல்லை. தசரதன் மனம் நொந்து இறந்தான். மந்திரிகள் பரதனை அழைத்து வந்தார்கள்.

பரதன் உத்தம குணம் உடையவன். இராமனைத் திரும்பி அயோத்திக்கு வர அழைத்தான். இராமன் மறுத்தான். கடைசியாக பரதன் இராமனை நோக்கி, " அண்ணா ! உமது பாதுகைகளைக் கொடும். நான் நீங்கள் நாட்டுக்குத் திரும்பும் வரையில் அவைகளை அரசனாக

வைத்து இராஜ்யத்தை நடத்துகிறேன். நான் அரசனுய் இருக்க அருகன் அல்லன்" என்ருன். இராமனும் பாதுகைகளைக் கொடுத்தான். பரதன் அவைகளைக் கொண்டு போய் சிம்மாதனத்தில் வைத்து பட்டாபிஷேகம் செய்தான்.

இராமன் காட்டில் இருந்தபோது ஒரு நாள் இராவணன் இராமனுக்குத் தெரியாமல் சீதையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான். இராவணன். ஒரு இராக்ஷஸ அரசன். இலங்கை அவன் தேசம். அது நமது நாட்டிற்குத் தெற்கிலுள்ள ஒரு தீவு. இராமன். வெகு காலம் சீதையைக் காணுமல் வருந்தினுன். கடைசியில் சீதையைத் தேடி தெற்கு நோக்கிச் சென்ருன். வழியில் அனுமான் என்ற ஒரு வானர வீரன் சினேகமானுன். அவன் உதவியால் சீதை இலங்கையில் இருப்பதை அறிந்தான். கடைசியாக இராவணனைக் கொன்று சீதையை மீட்டான்.

பதினுன்கு வருஷங்கள் கழிந்தன. பரதன் அண்ணன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தான். இராமன் அயோத்திக்குத் திரும்பிச் சென்ருன். வானர வீரனை அனுமானும் கூடவே சென்ருன். இராமனைக் கண்டவுடன்

பரதன் அவனைக் கட்டித் தழுவினான். பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தான். நகரம் அலங்கரிக்கப் பட்டது. இராமனுக்கு மகுடம் சூட்டினார்கள். அன்று முதல் இராமன் அரசனானான். சீதை அரசி ஆனாள். எல்லோரும் சுகமாய் வாழ்ந்தனர்.

முற்றிற்று.

# உலக நீதி.

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை யொருநாளு மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத விடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. 1

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேரும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. 2

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணுமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்
சினத்திருந்தார் வாசல்வழி சேர வேண்டாம்
வனந்தேடுங் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேரும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. 3

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டும்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா வூரிற்குடி யிருக்க வேண்டாம்
மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. 4

வாழாமற் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றுஞ் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே, 5

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியைவைத் திருக்கவேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்
சேர்த்தபுக ழாளனொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே. 6

கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை யொருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே. 7

சேராத விடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குணடணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. 8

மண்ணினின்று மண்ணோரஞ் சொல்லவேணடாம்
மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரியவேண்டாம்
கணணழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்கவேண்டாம்
மண்ணளந்தான் தங்கையுமை மைந்த னென்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. 9

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்லவேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே. 10

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏதுங் கென்னில்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவிச்சி கூலி
மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ எமன் றானே. 11

கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. 12

———



PRINTED AT THE SRI SHANMUKHA PRESS,
SOUTH MAIN STREET, TANJORE.



## எங்களால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள்.

* துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| * சாரதா நவீன பால பாடம் | ... | 2 | 6 |
| * சாரதா நவீன இரண்டாம் பாடம் | ... | 3 | 0 |
| * சாரதா நவீன மூன்றாம் பாடம் | ... | 3 | 6 |
| * சாரதா நவீன நான்காம் பாடம் | ... | 4 | 6 |
| * சாரதா நவீன ஐந்தாம் பாடம் | ... | 6 | 0 |
| * டிராயிங்புக் முதற்பாகம் (Pupils Series) | ... | 3 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | ... | 3 | 0 |
| * தாவரநூல் (Some Aspects of Plant Life) | ... | 6 | 0 |
| நல்லோர் சரிதை மலர் 3 | ... | 5 | 0 |
| நல்லோர் சரிதை மலர் 4 | ... | 6 | 0 |
| * சதுரங்க கணக்கு வாய்ப்பாடு | ... | 1 | 0 |
| ஸோஷியாலஜி (Sociology) | ... | 10 | 0 |
| * சகுந்தலா அல்லது காதல் வெற்றி | ... | 8 | 0 |
| தோத்திரப்பாடற்றிரட்டு | ... | 1 | 6 |

**T. N. சுப்பையா & சன்ஸ்,**

புஸ்தக வியாபாரம்,

அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர்.